★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 கார்த்திகை 18 முஹறம் 3 இதழ்: 294
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-12-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## மகளிர் பேரவை ரூ. 20 ஆயிரம் வசூல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மகளிர் பேரவை கடந்த நான்கு தினங்களாக சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ். குடாநாட்டில் 20,000 ரூபாவுக்கு அதிகமான நிதியினை திரட்டியுள்ளனர். இத்தொகை திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை எம். பி.யிடம் கையளிக்கப்பட்டது. நிதிசேகரிக்கும் பணியில் பின்வருவோர் ஈடுபட்டுள்ளனர். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருமதி யோகேஸ்வரன், செல்வி மஞ்சுளா செல்வநாதன், செல்வி தயாநிதி ஞானலிங்கள், திருமதி குணசிங்கம், திருமதி ரி. விஞ்ஞானசுந்தரம்,

(6ம் பக்கம் பார்க்க)

# உணவு விநியோகம் சீராகவில்லை

## கூட்டணி எம்.பிக்கள் கண்டனம்

## பொது ஸ்தாபனங்களிடம் கையளிக்குமாறு கோரிக்கை

(நமது நிருபர் மாலி)

சூறாவளியினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு, இன்று அநாதைகளாக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பு மக்களுக்கு, உணவு விநியோகம் சீராக நடைபெறவில்லையென்றும், அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் கூட உடனடியாகக் கவனிக்கப்படவில்லை என்றும் இங்கு விஜயம் செய்த கூட்டணி எம். பி.க்கள் கூட்டாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### எம். பி.க்கள் விஜயம்

மட்டக்களப்பு மக்களின் அவல நிலையை நேரில் கண்டறியும் பொருட்டு மானிப்பாய் எம் பி திரு வி. தர்மலிங்கம், யாழ்ப்பாணம் எம் பி திரு வி. யோகேஸ்வரன், மன்னார் எம்பி திரு.பி.எஸ் சூசைதாஸன், உடுப்பிட்டி எம் பி திரு ரி ராஜலிங்கம், கிளிநொச்சி எம் பி திரு வீ. ஆனந்தசங்கரி, பட்டிருப்பு எம் பி திரு பூ. கணேசலிங்கம் ஆகியோர் வீதி வீதியாகச் சென்று மக்களின் இன்னல்களைக் கண்டறிந்தனர். இயற்கையின் சீற்றத்துக்கு பலியாகியுள்ள குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்து, நிவாரண வேலைகள் நடைபெறுவதையும் அவதானித்தனர்.

### கச்சேரி மகாநாடு

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கச்சேரியில் ஒருவிசேட மகாநாடு நடைபெற்றது. நீதி அமைச்சர் திரு.கே. டபிள்யூ. தேவநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எஸ்.கனகரத்தினம், மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ.இராசதுரை, பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் உட்பட இங்கு விஜயம்செய்த வடபகுதி கூட்டணி எம். பி.க்கள்

[6ம் பக்கம் பார்க்க]

## கூட்டணிக் கிளைகளின் நிவாரண உதவிகள்

(யாழ்ப்பாணம்)

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்லூர்த் தொகுதி கூட்டணிக்கிளைகள் ஒருங்கிணைந்து இரண்டுலொறிகளில் கிடுகு, பாய், உணவுப் பொருட்கள், பாத்திரங்கள், உடைகள் ஆகியவற்றை நாளை மறுதினம் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது கடந்த நான்கு தினங்களாக நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில், சட்டத்தரணி ஆர். விசுவநாதன், திரு. கனகசபாபதி, திரு. எஸ். துரைராஜசிங்கம், திரு. எஸ். தவராசா, திரு வண்ணை ஆனந்தன் அடங்கிய குழு நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது. பெருந்தொகையான நிதியும் சேகரிக்கப்பட்டது. [கெ]

## காங்கிரஸ் மாநாட்டில் நிதி சேகரிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கல்யாண மண்டபத்தில் இம்மாதம் 10ம் தேதி நடைபெறவிருக்கும் தமிழ்க் காங்கிரஸ் மாநாட்டில், சூறாவளியினால் பாதிக்கப்பட்ட கிழக்குமாகாண மக்களுக்கு நிதிசேர்க்கப்படவிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் நிலைமையை நேரில் ஆராய்வதற்கும், அங்கு நிதி வழங்குவதற்கான ஏற்பாடு செய்வதற்கும், தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி குழு ஒன்று நேற்று கிழக்கு மாகாணம் சென்றுள்ளது. நாளை தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கிழக்கு மாகாணம் செல்லவிருக்கிறார்.

சூறாவளியினால் கிழக்கு மாகாண மக்கள் பாதிக்கப்பட்டதினால் தமிழ்காங்கிரஸ் மாநாடு, சிகரம், சோடனை அலங்காரம், கலைநிகழ்ச்சி எதுவுமின்றி அமைதியாக பொதுச்சபை கூட்டம் மட்டும் நடைபெறுமென்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ரி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

## மனித உரிமைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

மனிதஉரிமைகள் தினம், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கொண்டாடப்படவுள்ளது. விழாவில்எதிர்க் கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட பலர் உரையாற்றுவார்கள். (கெ)

## கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் குழு

[யாழ்ப்பாணம்]

கிழக்கிலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும், நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்காகவும், கிழக்கிலங்கை புனர்வாழ்வு உதவிக்குழு நேற்று யாழ். நகரில் அமைக்கப்பட்டது.

இக்குழு நிதிதிரட்டும் இயக்கங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து சேவையாற்றும்.

நேற்றுமாலை இக்குழு தமி

[6ம் பக்கம் பார்க்க]

## மட்டுநகர் ரயில் சேவையில் நான்குமணிநேரத் தாமதம்

[நமது நிருபர்]

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ரயில் சேவையில் தினமும் நான்கு மணிநேரம் தாமதம் ஏற்படுகிறது.

இது குறித்து ரயில்வே பகுதியினருடன் தொடர்பு கொண்ட போது, தற்போதைக்கு 'இது' தவிர்க்க முடியாதது என்றும் விரைவில் வழக்கமான நேர அட்டவணைக்கு ரயில் சேவைகள் இப்பகுதியில் நடைபெறும் என்றும் கூறினர்.

பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு பகுதிகளில், பாண், மாபால்மா ஆகியவற்றில் வர்த்தகர்களின் சுரண்டலைத் தடுக்க விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீடுகளைப் பழுதுபார்க்கவும், அத்தியாவசிய சமையல் பாத்திரங்களை வாங்கவும் சமூக சேவைகள் அமைச்சு நிவாரண உதவிகள் வழங்கத் தொடங்கியுள்ளது. [ம]

## 'வித்தி'க்கு அமிர் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

'யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் வழிநடத்தலின்கீழ் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், உன்னதமான ஒரு உயர் கல்விப்பீடமாக விளங்கி, ஈழத்தமிழ்மக்களின் வாழ்வில் முதன்மைமிக்க நட்சத்திரமாக பிரகாசிக்குமென நம்புகிறேன்.'

இவ்வாறு காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சு. வித்தியானந்தனை பாராட்டி அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். [கெ]

## எம்ஜிஆர் விஜயம் திடீர் ஒத்திவைப்பு

[சென்னை]

இம்மாதம் ஏழாம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன், தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

[விபரம் 4ம் பக்கம்]

## திருமண அழைப்பு

| மணமகன்: | மணமகள்: |
| --- | --- |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| இரத்தினராசா | செல்வராணி |
| (புகையிரதப் பகுதி, மருதானை) | (அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை) |

காலம்: 6—12—1978 புதன்கிழமை
பிற்பகல் 5-00 — 6 00

இடம்: மணமகன் இல்லம், வாசிகசாலையடி, உடுப்பிட்டி.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

| திருமதி மயில்வாகனம் | திருமதி வேலுப்பிள்ளை |
| --- | --- |
| (மணமகனின் தாயார்) | (மணமகளின் தாயார்) |
| 'நாசரத்தின வில்லா' | வாசிகசாலையடி, |
| கொக்குவில், | உடுப்பிட்டி |

0971

## தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்

## உர விலையைக் குறைக்கவில்லை?

[யாழ்ப்பாணம்]

அரசாங்கத்தால் உரத்தின் விலை பத்துவீதம் குறைக்கப்பட்டிருந்தும் தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க கைதடிக் கிளைகள் பழைய விலைக்கே உர வகைகளை விற்பனை செய்கின்றதாம்.

புதிய உர விலைகுறைப்புக்கிணங்க நாட்டிலுள்ள சகல கூட்டுறவு, தனியார் கடைகளிலும் 10 வீதம் குறைத்தே உரம் விற்பனைசெய்யப்படுகிறது. தென்மராட்சிப்பகுதி தனியார் விற்பனைநிலையங்களிலும் உரம் 10 வீதம் விலை குறைத்தே விற்பனைசெய்யப்படுகின்றது. ஆனால் தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க கைதடி, நாவற்குழி, தச்சன்தோப்பு, மறவன்புலோ தனங்கிளப்பு கிளைகள் பழைய விலைக்கே விற்பதனால், விவசாயிகள் இப்பகுதியிலுள்ள தனியார்கடைகளையே நாடிச்செல்கின்றனர்.

இதுசம்பந்தமான மகஜர் ப. நோ. கூ. சங்கத் தலைவர், உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல: ஈடு / 59

வேலுப்பிள்ளை கந்தையா கைம்பெண் புவனேஸ்வரி, ஆனைக்கோட்டை.

— வழக்காளிகள்

**எதிராக**

பொன்னுத்துரை பூபாலநாதன், ஆனைக்கோட்டை, தற்பொழுது அன்டசன் கொலனிங்ஸ் பிளட், பார்க் வீதி, நாறகம்பிட்டிய, கொழும்பு.

— எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனங்களை 1979-ம் ஆண்டு தை மாதம் 11-ந்திகதி (11-1-1979) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்த ஆதனங்களுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 3366/-வும் மேலும் 2640/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வட்டிவீதம் வழக்கு அனைத்த திகதியாகிய 1976ம் ஆண்டு பங்குனிமாதம் 31-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1977-ம் ஆண்டு ஆனிமாதம் 7-ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுதொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதவட்டியும் வழக்குச்செலவு ரூபா 330-85 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனடாப்பு

[1] வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவில்பற்று ஆனைக்கோட்டை யிறை தவசிவளவும் மணற்பிட்டியும், மணற்பிட்டிக் கொள்ளியும், மடத்தடியும், பிராமண வளவும், மறுபிரிவுகளும், நிலப்பரப்பு 66 குளி 9 (நில பர. 66 குளி 9) ஆனால் 3-2-65இல் உத்தரவுபெற்ற உலாந்தா முத்துக்குமாரசாமி என்பவரால் 2581-ம் இலக்கத்தில் எடுத்த படத்தின்படி நில. பர. 68 (நில. பர. 68) இதில் குறித்த படத்தில் 13 என்னும் இலக்கத்தால் சுட்டியபாகம் நிலப்பரப்பு இருபத்திமூன்றும் குளி பதினாறு தசம் ஆறு (நி. ப. 23 குளி 16 6 எல்லை கிழக்கு கரப்பிராணைப் பிள்ளையார் கோவில் ஆதனமும், செல்லப்பா வைரமுத்துவின் உரிமைக்காரரின் ஆதனமும், வடக்கு பொன்னுத்துரை கைம்பெண் விஜயசிவகாம சவுந்தரியின் ஆதனமும், குறித்தபடத்தில் 12-ம் என்னும் இலக்கத்தால் சுட்டிய பாகமும், குறித்த படத்தில் மேற்கு 12 என்னும் இலக்கத்தால் சுட்டிய பாகமும், குறித்த படத்தில் 11 என்னும் இலக்கத்தால் சுட்டிய 13 குளி விஸ்தீரணம் கொண்ட ஒழுங்கை நிலமும் தெற்கு செல்லப்பா வைரமுத்துவின் உரிமைக்காரரின் ஆதனமும், கரப்பிராணைப் பிள்ளையார் கோவில் ஆதனமும், இதடங்கலும். குறித்த 11 என்னும் இலக்கத்தால் சுட்டிய ஒழுங்கைப் பாவிப்புரித்தும்,

[2] மேற்படி ஆனைக்கோட்டை இறை: தவசி வளவும் மணற்பிட்டியும், மணற்பிட்டிக் கொள்ளியும், மடற்றடியும், பிராமணவளவும், மறுபிரிவுகளும், நில. பர. 66 குளி 9 ஆனால் குறித்த 2581-ம் இலக்கப் படத்தின்படி நில. பர. 68 இதில் குறித்த படத்தில் 10 என்னும் இலக்கத்தால் சுட்டிய பாகம் நில. பர. 7 குளி 5 எல்லை கிழக்கு குறித்த படத்தில் 11 என்னும் இலக்கத்தால் சுட்டிய 13 குளி விஸ்தீரணம்கொண்ட ஒழுங்கை, நிலம் வடக்கு, வேலன் சின்னத்தம்பிக்கு உரிய குறித்த படத்தில் 9 என்னும் இலக்கத்தால் சுட்டிய பாகம் குறித்த படத்தில் 4 என்னும் இலக்கத்தால் சுட்டிய ஒழுங்கை நிலமும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனமும், தெற்கு: செல்லப்பா வைரமுத்துவின் உரிமைக்காரரின் ஆதனமும் இதடங்கலும், குறித்த படத்தில் 14, 11, என்னும் இலக்கங்களால் சுட்டிய ஒழுங்கைகளில் பாவிப்புரித்தும்.

[3] மேற்படி ஆனைக்கோட்டை இறை:- தவசி வளவும், மணற்பிட்டியும், மணற்பிட்டிக் கொள்ளியும், மணற்றடியும் பிராமண வளவும், மறுபிரிவுகளும், நில. பர. 66 குளி 9 ஆனால் குறித்த 2581-ம் படத்தின்படி நிலப்பரப்பு 68. இதில் குறித்த படத்தில் 7 என்னும் இலக்கத்தால் சுட்டியபாகம் நில. பர. 1 குளி 16.1 (நில. பர. 1 குளி 16.1) எல்லை கிழக்கு, மேலே விபரிக்கப்பட்ட 2-ம் ஆதனம், வடக்கு குறித்த படத்தில் 4 என்னும் இலக்கத்தால் சுட்டிய நில. பர 1குளி 8 விஸ்தீரணம் கொண்ட ஒழுங்கை நிலமும், குறித்த படத்தில் 6, 5, என்னும் இலக்கங்களால் சுட்டிய பாகங்களும். மேற்கு கந்தன் அப்புத்துரையின் ஆதனமும், தெற்கு செல்லப்பா வைரமுத்துவின் உரிமைக்காரரின் ஆதனம். இதடங்கலும் குறித்த 4 என்னும் இலக்கத்தால் சுட்டிய ஒழுங்கைப் பாவிப்புரித்தும்.

சி. ஆ. த வடிவேலு, ஜே. பி.,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்'',
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
20-11-78

0959

## நாச்சிமார் கோயிலில் சுமங்கலி பூஜை

[யாழ்ப்பாணம்]

திருவண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சிஅம்மன் (நாச்சிமார்) கோயிலில் ஸ்ரீ மகாலட்சுமி பூசையும் சுமங்கலி பிரார்த்தனையும் இம் மாதம் 13ம் திகதி புதன் கிழமை நடைபெறும்.

இந்த விசேஷ ஆராதனையில் கலந்துகொள்ளவிரும்புகிறவர்கள் முன்னதாகவே தம்முடன் தொடர்புகொண்டு ஒழுங்குகள் செய்து கொள்ளும்படி மேற்படி தேவஸ்தான பரிபாலனசபையினர் கேட்டுள்ளனர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டம் நீதிமன்றம்

யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டுவைச் சேர்ந்த காலஞ்சென்ற வெற்றிவேலு கந்தையா என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்தினதும் உடமைப்பொருளினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

வயித்தியகலாநிதி குகநாகதாசன் கைம்பெண் தில்லைநாயகி, 82/6, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3334

எதிராக

1. குகநாகதாசன் தயாநிதி
2. செல்லப்பா செந்தில்நாதனும்
3. பெண் கலாநிதி
4. குகநாகதாசன் சாந்தநிதி (பராயமற்றவர்)
5. குகநாகதாசன் ஜயநிதி
6. கேதீஸ்வரதாசன் இராதாகிருஷ்ணன்
7. கேதீஸ்வரதாசன் கிருஷ்ணகுமாரி (பராயமற்றவர்)
8. கேதீஸ்வரதாசன் கிருஷ்ணவதனி (பராயமற்றவர்)
9. கேதீஸ்வரதாசன் கிருஷ்ணானந்தா எல்லோரும் நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணசாதனமில்லாத மரணச்சொத்து நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 8-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 24-ம் நாளன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
ஒப்பம்
ம. சிதம்பரநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.

0966

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## விளம்பரம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை.

# பதவி வெற்றிடம்

மொத்த விற்பனவுச் சாலை பண்டகசாலைக் காப்பாளர் தரம் 11

மேற்குறித்த பதவி வெற்றிடத்திற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வயது:**

23க்கும் 50க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(கூட்டுறவு சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)

விண்ணப்பப்பத்திரம், மற்றும் தேவையான தராதரங்கள், தகைமைகள் பற்றிய விபரங்கள் யாவற்றையும் எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது கீழ்க்காணும் விலாசத்திற்கு முத்திரை ஒட்டப்பட்ட தமது சொந்த முகவரியிட்ட கடித உறையை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் நிரப்பப்பட்ட விண்ணப்பப்பத்திரம் 20-12-78-ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக ''தலைவர், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும்போது தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பண்டகசாலைக் காப்பாளர் தரம் 11 பதவிக்கான விண்ணப்பம்'' என்று எழுதப்படல் வேண்டும்.

தலைவர்,
பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

திகதி: 01-12-78. 0964

## சிறு விளம்பரம்

### தேவை

வவனியா நகர எல்லைக்குள் மன்னார் வீதியில் தண்ணீர், மின்சார வசதியுடன் மில் போடுவதற்கும், வீடு கட்டுவதற்கும் ஏற்ற இரண்டு ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: 69/1, பஸார் வீதி, வவனியா. டெலிபோன்: 348. 0945

## கிளிநொச்சி எம். பி. அலுவலகத்தில் ஒப்படைக்கலாம்

[கிளிநொச்சி]

கிழக்கிலங்கையில் சூறாவளி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி அல்லது பொருள் வழங்கவிரும்பும் கிளிநொச்சித் தொகுதி மக்கள் கிளிநொச்சி எம். பி. யின் அலுவலகத்தில் அவற்றை ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்குப் பற்றுச்சீட்டுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. [உ]

## செய்திக்கு ஒருவிளக்கம்

27-11-78 ''ஈழநாடு'' இதழில் 2ம் பக்கத்தில் ''எதிரிகள் விடுதலை'' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் பின்வரும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

''மேற்படி வழக்கில் குழந்தைவேலு இராசரத்தினம், குமாரு குழந்தைவேலு, குழந்தைவேலு யோகரத்தினம் என்போர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

முறைப்பாட்டுக்காரரும், எதிரிகளும் மிக நெருங்கிய உறவினர்களும் அயலவருமாவர்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இடையில் காணித்தகராறு நிமித்தம் ஏற்கனவே பல்லாண்டு காலமாகப் பகைமை நிலவிவந்துள்ளது.

சாட்சியங்களிடையே காணப்பட்ட முரண்பாடு மாத்திரமல்லாது, வழக்காளி தரப்பினர் இவ்வழக்கை சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கத்தவறியமையும் எதிரிகளை விடுதலைசெய்வதற்குக் காரணமாக அமைந்தது.'' [உ]

# கேள்வி விளம்பரம் - 1979

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு 1979-ம் ஆண்டு கீழ்க்குறிக்கப்படும் தேவையான பொருட்கள் விநியோகம் செய்வதற்கு சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளரால் முத்திரையிடப்பட்ட விலைக்குறிப்புகள் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 1978-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந் திகதி (19-12-78) நண்பகல் 12 மணிவரை இவ்வலுவலகத்தில் பிணைப்பணமும், கேள்விப்பத்திரப்பணமும் கீழ்க் குறிப்பிட்டபடி செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது. கேள்விகள் விசேட ஆணையாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என விலாசமிடப்பட்டு தபால் உறையின் இடதுகை மேல்கோணத்தில் இதற்கான கேள்விப் பத்திரமென்று எழுதப்பட்டு பதிவுக் கடிதத்தின் மூலம் 27-12-78-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கிடையில் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். அல்லது சபையின் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்பட வேண்டும்.

இவைகளைப்பற்றிய விபரங்கள் ஏதாவது தெரிய விரும்பின் அலுவலக நேரத்தில் நகரசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | பிணைப் பணம் | கேள்விப் படிவப்பணம் |
|---|---|---|
| 1. மின்சார உபகரணங்கள் | ரூ. 250-00 | ரூ. 25-00 |
| 2. அலுவலகப் பாவனைக்குரிய அச்சிடப்பட்ட படிவங்களும், புத்தகங்களும், உபகரணங்களும் | 50-00 | 15-00 |
| 3. சுகாதார / வேலைப்பகுதிக்கு தேவையான பொருட்கள். | 50-00 | 15-00 |

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை, அலுவலகம்,
சாவகச்சேரி,
1-12-78

0970

# "அரிசியில் தன்னிறைவு காண மேலும் 2 கோடி புசல் அரிசி விளைவிக்கவேண்டும்"

## வரவுசெலவுத்திட்டம் மீது புள்ளிவிவரம்காட்டி 'சிவா' பேச்சு

(கொழும்பு)

[பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பின்போது வவுனியா தா. சிவசிதம்பரம் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது]

''உள்ளதை உள்ளபடி எடுத்துக்கூறி இந்த வரவு செலவுத்திட்டம் எங்களுடைய நாட்டுக்கு ஒவ்வாததாக இருக்கிறது எமதுமக்களுக்கு ஏற்ற முறையிலே அது அமையவில்லை என்று சுட்டிக்காட்டுகின்ற பொறுப்பு எமக்கு இருக்கிறது. ஒரு நாட்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தை அமைத்து, சபையிலே சமர்ப்பிக்கும்பொழுது, அந்த நாட்டிலேயுள்ள சகல மக்களுக்கும் இன,மத பேதமின்றி, வர்க்க பேதமின்றி அந்த வரவு-செலவுத்திட்டம் பயன்தரக்கூடியதா என்று சிந்திக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் உண்டு. சோஷலிச ஜனநாயக,தர்மிஷ்ட.தார்மீக அரசாங்கம் என்று கூறிக்கொள்ளுகின்ற ஓர் அரசாங்கத்துக்கு இந்தப்பொறுப்பு கூடுதலாக இருக்கின்றது.

### 40 வீதத்தினருக்கே பயன் உண்டு

''எங்களுடைய சனத்தொகை ஒருகோடியே நாற்பது லட்சம்மாகும். இந்த ஒரு கோடியே நாற்பதுலட்சம் மக்களிலே இந்த வரவு-செலவுத்திட்டம் 40 சதவிகிதமான மக்களுக்குத்தான் உற்சாகத்தைக் கொடுக்கிறது என்பதை நான் இங்கே பகிரங்கமாகக் கூறி வைக்கவிரும்புகிறேன். இந்த நாற்பதுசத விகிதமான மக்கள் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் ஆராய வேண்டும். உயர்ந்த, மத்திய இடைமத்திய வகுப்பிலேயுள்ளவர்களுக்குத்தான் இந்த வரவு செலவுத்திட்டம் இரங்குகின்றது; உற்சாகத்தைக் கொடுக்கின்றது, உதவுகின்றது. அரசாங்கசேவையிலே இருப்பவர்களுக்கு இந்த வரவுசெலவுத் திட்டத்தினால் கிடைக்கின்ற உதவி ஏதோ பாரிய உதவி என்று நான்கூறவிரும்பவில்லை. இன்றைய வாழ்க்கைப்பழு-வாழ்க்கைச்செலவு - எவ்வளவு தூரத்துக்கு ஏறியிருக்கிறதுஎன்பதை உணர்ந்து கௌரவ நிதி அமைச்சர் ஆயிரம் ரூபாவை ஒரு மாதத்துக்கு வருமானமாகப்பெறுகிற ஒருவருக்கு அவர் செலுத்துகிற வருமானவரி நீக்கப்படவேண்டுமென்று தம்முடைய வரவுசெலவுத்திட்டத்திலே கூறுவதாக இருந்தால், 200, 300, 400 ரூபாவை ஒரு மாதத்துக்கு வருமானமாகப் பெறுகிற, இந்த நாட்டிலே வாழ்கிற 60 சதவீதமக்களுக்கு இந்த வரவுசெலவுத்திட்டம் எந்த வகையிலே உதவுகிறது என்று கேட்கவிரும்புகிறேன். அரசாங்கசேவையில் உள்ளவர்களுக்கு, எனக்குமுன் பேசிய கௌரவ மன்னார் தொகுதி உறுப்பினர் (திரு. பி. எஸ். சூசைதாசன்) அவர்கள் கூறியதுபோல், 500, 600 ரூபாவுக்கு மேற்பட்ட மாத வேதனத்தைப் பெறுகிறவர்களுக்குத்தான் பத்துவீத வேதன உயர்ச்சியும், வருமானவரிச் சலுகையும் ஓரளவு பயன்படுகிறது. குறைந்த வருமானத்தைப்பெறுகிறவர்களுக்குஇந்த வரவு-செலவுத் திட்டத்தால் எந்தவிதமான பயனுமில்லை.

### இவர்கள் எந்த வர்க்கம்?

நம்நாட்டில்வாழும் ஒரு கோடியே நாற்பதுலட்சம பேரில் அறுபதுசதவீத மக்கள் எந்த வர்க்கத்தினர் என்று கேட்கவிழைகின்றேன். இந்த நாட்டினுடைய உணவை உற்பத்திசெய்துதருகிற, எங்கள் நாட்டு அந்நியசெலாவணியை வெளிநாட்டுக்கு விரயமாக்காமல் எங்களுடைய நாட்டின் உணவை எமக்கு விளைவித்துத் தருகின்ற விவசாயி இந்தநாட்டில் ஒரு தனி வர்க்கத்தைச் சேர்ந்தவன். நாற்புறமும்கடல் சூழ்ந்த எங்களுடைய தீவிலே கடல்வளத்தை எங்களுடைய பொருளாதாரத்துக்குத்தேடித் தருவோர். மற்றொரு வர்க்கத்தினர் உப உணவு உற்பத்திப் பொருள்களை விளைவித்துத் தருகின்ற விவசாயியும் இந்த அறுபது வீதத்திலே அடங்குகிறான். வான்பயிரை, தென்னையை, இறப்பரை,தேயிலையை,கொக்கோவாவைசில நிலப்பரப்பிலே விளைவிக்கின்ற விவசாயியும் இந்த அறுபது வீதத்திலே அடங்குகிறான் சாதாரணமாக அன்றாடம் கூலித்தொழிலைச் செய்து தங்களுடைய வாழ்க்கையை நடத்துகின்ற இலங்கையன் இந்த அறுபது வீதத்திலே அடங்குகிறான். இவர்கள் அனுபவிக்கின்ற வாழ்க்கைச்செலவினங்களுடைய பழுவைத்தான் மேலவகுப்பிலே இருக்கிற வருமானவரி செலுத்துகிறவர்களும் அனுபவிக்கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது.

முதலாவதாக எங்களுடைய நெல்விவசாயியையும் நெல்விவசாயத்தையும்பற்றி ஒரு சில வார்த்தைகள் பேசவிழைகின்றேன். எங்களுடைய இலங்கைத்தீவின் நிலப்பரப்பு ஒரு கோடியே அறுபத்திரண்டுலட்சத்து இருபத்திரண்டாயிரத்து இருநூற்றுமுப்பது ஏக்கர். அந்த நிலப்பரப்பிலே நெல்லை விளைவிக்கின்ற பிரதேசம் பன்னிரண்டு இலட்சத்து அறுபத்தோராயிரம் ஏக்கர்மாத்திரம்தான். எங்கள் நாட்டின் முக்கிய உணவான அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது. அதனை எங்கள் நாட்டில்தான் விளைவிக்க வேண்டுமென்று நாம் கூறுகிறோம். பண்டைய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் எடுத்துவந்த ஏர்பூட்டு விழாவை இன்று விழாவாகக் கொண்டாடுகிறோம். வானொலியிலென்ன பத்திரிகைகளிலென்ன, எங்கெங்கு நாம் செல்கின்றோமோ அந்தந்த இடங்களிலெல்லாம் கூட வியர்வை சிந்துவதாலும் கடும் உழைப்பாலும் தான் சிதறிப்போன, சிதைந்து போன எங்கள் நாட்டின் பொருளாதாரத்தைச் செப்பனிட முடியுமென்று நாம் கூறுகிறோம். ஆனால் இன்றைய நெல் உற்பத்தியைப்பற்றி ஒரு சில புள்ளிவிவரத்தை நான் தந்தால்-நான் தரும் புள்ளி விவரத்தில் தவறு இருக்குமென்றால் அதிலுள்ள தவறைச் சுட்டிக்காட்டினால் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்- நீங்கள் உண்மையை அறிவீர்கள்.

### மேலும் 2 கோடி புசல் அரிசி தேவை

இலங்கையின் நிலப்பரப்பில் நெற்சாகுபடி செய்யும் நிலம் 7.8 சத வீதந்தான், இலங்கையிலே விளைவிக்கப்படும் அரிசி மூன்றரைக்கோடி புசல் அரிசிமாத்திரந்தான். இலங்கையிலே எங்கள் உணவுத் தேவைக்காகத் தேவைப்படும் அரிசி ஐந்தரைக்கோடி புசல். இது நான் கூறும் எண்ணிக்கை அல்ல. புள்ளிவிவரத் திணைக்களத்தின் கணக்குப்படி நான் எடுத்துக் கூறும் புள்ளிவிபரமாகும். ஆகவே எங்கள் நாடு அரிசியிலே தன்னிறைவு பெற வேண்டுமானால் இன்னும் இரண்டுகோடி புசல் அரிசியை இன்றைய சனத்தொகைக்கேற்ப நாம் உற்பத்தி செய்ய வேண்டும்.

இதேவேளையில் நாம் இந்தோனேஷியாவுக்கு அரிசியை ஏற்றுமதி செய்கிறோம். இன்னும் பல நாடுகள் எங்கள் அரிசியை விரும்புகின்றன என்று கூறுகிறோம். ஆனால்

[5-ம் பக்கம் பார்க்க]

## கடன்சபைத் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அகில இலங்கை தபால் தந்தி தொலைத்தொடர்பு உத்தியோகஸ்தர்களுக்கான கடன் சபைத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இத்தேர்தலில் திரு. சி. சாமிநாதன், என். சுந்தரலிங்கம், ஆகிய இருவரும் 77 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினர். இப்போட்டியில் ஐவர் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[கெ]

'ப. நோ. கூ. சங்கங்களில்'

# நல்லரக அரிசி விற்றால் மக்கள் ஏன் வேறிடம் செல்கிறார்கள்?'

## சபையில் பண்டிதர் கேள்வி

(கொழும்பு)

உணவு கூட்டுறவு அமைச்சின் மான்யம் மீதான விவாதம் குழு நிலையில முதலாம் திகதி ஆட்சி மன்றத்தில் ஆரம்பமானபோது ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் முதலில் பேசினார். சபையில் மிகக்குறைவான உறுப்பினர்களே இருந்தனர். குறுக்கீடுகள் எதுவுமின்றி பண்டிதர் இரத்தினம் கூட்டுறவு இயக்கம் முதல் அரிசி விலைவரை பலகுறைகளையும் எடுத்துக்காட்டி சில யோசனைகளையும் தெரிவித்தார்.

பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 2 ரூபாய் 90 சதத்திற்கு விற்கப்படும் அரிசி உதவாதது என்று கூறிய ஊர்காவற்றுறைப் பிரதிநிதி நல்ல அரிசி பலநோக்கக் கூட்டுறவுச்சங்கங்களில் விற்பனை செய்யப்பட்டால் மக்கள் அங்கு தான் அரிசி வாங்குவார்களே யொழிய வேறு இடங்களுக்குச் செல்ல மாட்டார்களென்றார்.

கணேமுல்லை என்ற இடத்தில் ஒரு சிங்களப்பெண்ணை மணந்து அங்கு பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக வாழ்ந்த வேலணையைச்சேர்ந்த சங்கரப்பிள்ளை தம்பையா என்பவருக்கு இலங்கையருக்குரிய பங்கீட்டுப்புத்தகம் கொடுக்கப்படாமலிருந்ததையும் இது பற்றி தாம் சபையில் முன்னர் கொண்டுவந்த தனியார் பிரேரணையையும் எடுத்துக்கூறிய பண்டிதர் இரத்தினம் பிரயத்தனத்தின் மீது அவருக்கு இலங்கையருக்குரிய பங்கீட்டுப்பத்தகம் கிடைத்ததென்றும் சொல்லிவிட்டு இப்பொழுதும் திரு. தம்பையா தன்னிடம் வந்தாரென்றும் வேலையில்லாதிருப்போருக்கு வழங்கப்படும் ஐம்பது ரூபாய் விசேஷபடி தம்பையாவின் இரண்டு மக்களுக்கும் வழங்கப்படவில்லையென்றும் அவர்களுடைய தந்தை அந்தப் பகுதியைச் சேர்ந்தரல்ல என்பதுதான் இதற்குக்காரணம் என்றும் கூறப்பட்டதாம் என்றார்.

தம்பையாபற்றி எடுத்துக் கூறியபண்டிதர் தென்னிலங்கையில் தமிழர்களைக் குடியேற்றப் போவதாகச் சொல்பவர்கள் இதுபற்றிச்சிந்திக்க வேண்டுமென்றார்.

கூட்டுறவு ஆணைக்குழுவின் தலைவர் இங்கு இருக்கிறார் [நீதிஅமைச்சர் தேவநாயகம்] விரைவில் அதன் அறிக்கையை வெளியிடுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறினார் பண்டிதர்.

பிரதிக் கலாச்சார அமைச்சர் திரு. டபிள்யு. பி.எம்.ஜி. பண்டார அரிசி விநியோகம் பற்றியும் கூட்டுறவு இயக்கத்திலுள்ள குறைகளையும் எடுத்துக்கூறி திருக்கோணமலையிலுள்ள கிட்டங்கிகளில் ஒன்றில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வைக்கப்பட்டிருக்கிறதென்றும் அது பாவனைக்கு உதவாதென்றும் கூறினார்.

### நல்லூர் 'சிவா' பேச்சு

நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் பங்கீட்டுப்புத்தகங்கள் குறைந்துவிட்டதால் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கவேண்டியநிலைக்குவந்துவிட்டதென்றும் இவை புதிய துறைகளில் ஈடுபட ஊக்கமளிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்த நல்லூர் எம். பி. சில கூட்டுறவுத் தாபனங்கள் இதற்கு மாறாகச் செயல்படுகின்றன என்றார்.

முதலை மார்க் மண்வெட்டிகளுக்கு விற்பனைப் பிரதிநிதியான நல்லூர் ப. நோ. கூ. சங்கம் யாழ்ப்பாண விவசாயிகள் அதிகம் விரும்பும் மூக்கோண மண்வெட்டிவேண்டுமென்று பல தடவைகேட்டதாலும் சதுர மண்வெட்டியையே அரச வர்த்தகக் கூட்டுத் தாபனம் அனுப்புகிறதென்றார்'

அனுராதபுரம் கிழக்கு எம். பி யும் மாவத்தகமைப் பிரதிநிதியும் வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் சிறப்புற இயங்குவது குறித்துப் பாராட்டுத் தெரிவித்தனர். படித்தவர்கள் இதில் ஈடுபட்டதால் தான் அந்த இயக்கம் அங்கு நல்லமுறையில் வளர்ந்ததென்று கூறினர்.

Melville Arrow Designs

BAYER

விவசாய இரஷாயனப் பொருள்

சேர்கோப்பூர் 36/.

பாவித்து

நெற்பயிரைத் தாக்கும் எல்லாக் களைகளையும் கட்டுப் படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம் லிமிட்டட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி : 93563 - 96331 - 6

# எம். ஜி. ஆர். விஜயம் ஒத்திவைப்பு;

# சிங்கப்பூரிலிருந்து மனேகரனுக்கு தகவல்

சென்னை, டிச. 3

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமது இலங்கை விஜயத்தை ஒத்திவைத்துள்ளார். சிங்கப்பூரிலிருந்து அவர் நேராக தமிழகம் திரும்பவிருக்கிருர்.

முதல்வர் திரு. எம். ஜி. ஆர். இத்தகவல்களை தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. நாஞ்சில்மனேகரனிடம் நேற்று தொலைபேசி மூலம் வெளியிட்டார்.

தாம் இலங்கை விஜயத்தை ஒத்திவைத்திருப்பதாகவும் சிங்கப்பூரிலிருந்து நேராக சென்னை திரும்பவிருப்பதாகவும் தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட விரும்பதாகவும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

## இராமேஸ்வரம்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இராமேஸ்வரம் மண்டபம் ஆகிய பகுதிகளுக்கும் சென்று நிலைமையை முதல்வர் பார்வையிடவிருக்கிருர்.

இம் மாதம் 7ம் திகதி முதல்வர் இலங்கை வரத் திட்டமிட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (உ)

## வர்த்தக வலயத்தில் இந்திய முதலீடு

# லலித் 6-ம் திகதி விஜயம் செய்து பேச்சுவார்த்தை நடத்துவார்

புதுடில்லி, டிச. 3

இலங்கை கப்பல்போக்குவரத்து வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இம் மாதம் 6ம் திகதி புதுடில்லி வருகிருர்.

சமீபத்தில் பாரதம் விஜயம் செய்திருந்த இலங்கை ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்தன செய்துகொண்ட ஏற்பாட்டின் பிரகாரம் இவர் இங்கு வருகிருர்.

இலங்கையின் உத்தேசசுதந்திர வர்த்தகவலயத்தில் பாரதத்தின் முதலீடு உட்பட பல விடயங்கள் குறித்து திரு. அத்துலத் முதலி பாரதத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்

இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உடன்படிக்கை கள் இப் பேச்சுவார்த்தைகளின் போது கைச்சாத்திடப்படும என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

# தேநீர்க்கடை முன் நின்றவர்களை பிடித்துச் சென்றனராம்

## குருநகர் பொலிசார் பற்றி மேலிடத்துக்குப் புகார்

[யாழ்ப்பாணம்]

பாஷையூர்தோவலயத்துக்கு அருகில் உள்ள தேனீர்கடைக்கருகில் நின்ற சிலர் குருநகர் பொலிசாரால் பிடித்துச் செல்லப்பட்டது தொடர்பாக பாஷையூர் கட்டளைக்குரவர் வண ஏ. எம் இராசநாயகம் யாழ். பொலிஸ் அதிபர் எதிர்க்கட்சித்தலைவர் யாழ்ப்பாணம் எம். பி. ஆகியோர்களுக்குப்புகார் தெரிவித்துள்ளார்.

பாஷையூர் கோவிலின் அருகே உள்ள தேனீர்கடையில் தேனீர் அருந்துவதற்காக நின்று கொண்டிருந்த சிலர் பொலிசாரால் பிடித்துச் செல்லப்பட்டனராம்.

செல்வன் மைக்கல் துரைமணி றெசினஸ் ஆகிய மூவரும் கோவிலின் முன்னுள் உள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பயிற்சியை பார்த்தபின் தொழிலுக்குச் செல்லு முன்னர் தேனீர் அருந்துவதற்காக தேனீர்கடையின் முன்நின்ற போது ஜிப் வண்டியில் வந்த பொலிசார் இவர்களை எது விதகாரணமும் இன்றி பிடித்துச் சென்றுர்களாம் இவர்களை விடுவிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்காது போகவே பாஷையூர் கட்டளைக்குரவர் மேலிடத்தின் உதவியை நாடியுள்ளார்.

# "ஆங்கிலம் கற்பதில் வெறுப்பா?"

## கல்கத்தா தலைமை நீதிபதி கவலை

சென்னை, டிச. 3

"ஆங்கில மொழியைக் கற்பது குறித்து நாட்டின் சில பகுதிகளில் வெறுப்புநிலை தோன்றியிருப்பது வேதனைக்குரியது"

இவ்வாறு கல்கத்தா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. சங்கர்பிரசாத்மித்ராவருத்தம் தெரிவித்தார்.

அண்ணமலைப் பல்கலைக்கழகத்தின் 47வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஆங்கிலத்தை சகல பல்கலைக்கழகங்களிலும் போதிக்க முழு வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும்." என்றும் அவர் சொன்னுர்.

உபவேந்தர் ராஜா சேர் முத்தையா செட்டியார் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

பல்கலைக்கழகம் பரீட்சையில் சித்திபெற்றேரில் 450 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## உல்லாசப்பயணி

(கொழும்பு)

சூரு வளியின் போது கல்குடாப் பகுதியில் அகப்பட்டுக்கொண்ட உல்லாசப்பயணி ஒருவர் அப்போது குழந்தை ஒன்றையும் பிரசவித்துள்ளார்,

தாம் பிரசவித்த குழந்தையுடனும் மற்றும் சில உல்லாசப்பிரயாணிகளுடனும்நான்கு நாட்களாக நடந்துசென்று பட்டக்களப்பு விமானநிலயத்தை அடைந்த இவர்கள் ஹெலிகாப்டர்மூலம் கொழும்புக்குஅழைத்துவரப்பட்டனர்,

# இலங்கை - பங்களாதேஷ் வர்த்தகத் தொடர்புகள்

டாக்கா, டிச 3

இலங்கைககும் பங்களாதேஹுக்கும் இடையில்வர்த்தகத் தொடர்புகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் டாக்காவில் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கைக் குழுவிற்கு இலங்கை கப்பல் போக்குவரத்து வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமைதாங்குகிருர்.

பேச்சுவார்த்தைகள் மூன்று நாட்கள் வரை நீடிக்கும்.

பரஸ்பர பரிமாற்றம், கப்பல் போக்குவரத்து என்பன குறித்து இப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்படும். (உ)

# "ஆக்கிரமிப்பு நோக்கம் நீங்கினுலே சீனவுடன் உறவுசாத்தியம்"

## ஜனதா கட்சித் தலைவர் கருத்து

புதுடில்லி, டிச. 3

"இந்திய-சீன உறவுகள் சுமூகமடைவதை நாம் விரும்புகிறேம். ஆனல் இந்தியாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு நோக்கங்களைச் சீன கைவிடும் பட்சத்திலேயே இந்திய - சீன உறவுகள் சுமூகமடைய முடியும். இந்தியாவுக்கு எதிரான கொள்கைகளை சீன கைவிட்டிருக்குமானல், அதனை அது நடைமுறையில் தனது நடவடிக்கைகள்மூலம் நிருபித்துக் காட்டவேண்டும்'' என இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் மதுலிமாயே இந்திய - சீன உறவுகள்பற்றி இந்தியாவின் பிரபல வார ஏடான 'இலஸ்ட்ரேடட் வீக்லி ஒஃப் இந்தியா' வில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது சௌகரியங்களுக்கேற்ப தமது நிலைபாடுகளைச் சீனத் தலைவர்கள் மாற்றிக் கொள்ளுகின்றனர். இந்தியாவுடனன உறவுகளைச் சுமூகப் படித்திக்கொள்ள தான் விழைவதாகச் சீன கூறிக்கொள்ளுகின்றபொழுதிலும் நடைமுறையில் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இதற்கு மாறனவையாக உள்ளன. எிக்கிமைப் பொறுத்தளவில் அது இந்தியாவுக்கு நேர்விரோதமாக நிலைபாட்டினை எடுத்துள்ளது. வடகிழக்கு இந்தியா பிரதேசத்தில் உள்ள கலகக்காரர்களுக்கு உதவியளித்துவருகின்றது.

''ரஷ்யாவுக்கு எதிரான ஒரு அணியில் இந்தியாவினை இணைத்துக்கொள்ள சீன எண்ணுமானல் அது பகற்கனவாகவே முடியும் என்பதை சீனத் தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்'' என மதுலிமாயே தமது கட்டுரையில் மேலும் கூறியுள்ளார். (உ)

## "மரவள்ளிக் கிழங்கு, மல்லிகையை

# தொழில் ஆரம்பிக்க ஆதாரமாகக் கொள்ளலாம்"

## தமிழக அமைச்சர் ஆலோசனை

சென்னை, டிச. 3

''மரவள்ளிக்கிழங்கையும் மல்லிகைப்பூவையும் ஆதாரமாகக்கொண்டு தொழில்களை ஆரம்பிக்கலாம்''

இவ்வாறுதமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு, சி. பொன்னையன் ஆலோசனை கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், ''இதன் மூலம் கிராமப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம்'' என்று சொன்னுர். (உ)

# ஒரு நாளில் ரூ. 10 ஆயிரம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்ட வளர்ச்சிக்கழகம் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களுக்கு நிதி திரட்டுகின்றது. ஒருநாளில் மட்டும் பத்தாயிரம் ரூபாய் சேர்ந்துள்ளதாம். [கெ-அ]

Melville Assaw Designs

BAYER

விவசாய இரஷாயனப் பொருள்

லெபேசிட்

பாவித்து

நெற்பயிரைத் தாக்கும் பூச்சிப் புழுக்களை கட்டுப் படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம் லிமிட்டட்

[illegible] வீதி, கொழும்பு தொலைபேசி: 93563 - 96331 - 6

நாகம்ஸ்
(கன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நாளை நமதே

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - தேவிகா
சாந்தி

Rio (Jaffna)
Daily 4 Shows
Gina
in
THE YOUNG REBEL
CERVANTES

## பரி.யோவான் ஆசிரியர்கள் வெற்றி

(அரியாலை)

யாழ். பரி. யோவான் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்குமிடையில் பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 5 - 2 கோல்களால் பரி.யோவான் கல்லூரி ஆசிரியர் கோஷ்டி வெற்றியீட்டியது.

போட்டியின் பின்னர் பரி. யோவான்கல்லூரி ஆசிரியர் குழுத்தலைவர் திரு. ஏ. எஸ். தாமலிங்கம் தலைமையில் தேநீர் விருந்து நடைபெற்றது. (அ)

தினசரி 4 காட்சிகள் கடைசி சில தினங்கள்
விரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி எஸ். எஸ். ஆர்- வீரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி-ராஜம்
[யாழ். நகர்] நடித்த
சிவகெங்கைச் சீமை (புதியபிரதி)

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வந்தாளே மகராசி
அடுத்தவெளியீடு லலிதா

லிடோ போன்: 7696 தினசரி 4 காட்சிகள்
[யாழ் நகர்]
எங்கள் தங்க ராஜா

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ்நகர்] முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) சிவாஜி - ஜெமினி - சாவித்திரி
நடித்த
பந்த பாசம் (புதிய பிரதி)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் போன்: 466
[யாழ்ப்பாணம்] 6-வது வெற்றி வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

2-வது ஹவுஸ் புல் வாரம்!
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - சரோஜாதேவி -, மாலினி - சந்திரபாபு
நடித்த (இரண்டாவது வாரம்)
(புத்தம்
சபாஷ் மீனா புதிய பிரதி)

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
SPECIALIST
Full action Film

HOUSE FULL! HOUSE FULL!! HOUSE FULL!!!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ஏமாற்றத்தைத் தவிர்க்க ரிக்கற்றுக்கு முந்துங்கள் தினசரி 5 காட்சிகள்
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)
'பிளட்மணி' அதிசிறந்த கராட்டிச் சித்திரம்

## மூடவேண்டாமென கோரிக்கை

[நாயன்மார்கட்டு]

நாயன்மார்கட்டு யாழ். மாநகரகூட்டுறவுச்சங்கக்கடை இலக்கம் 37ஐ மூடிவிடுவது என யாழ்ப்பாண மாநகர கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை செய்த முடிவினைமீண்டும் பரிசீலனை செய்யுமாறும், நாயன்மார்கட்டில் வேறு நல்ல வசதியான கடையின்மையால் மூடவேண்டாம் என்றும் நாயன்மார்கட்டு சனசமூக நிலையமும் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகமும் யாழ்ப்பாண மாநகர கூட்டுறவுச் சங்கத்தலைவரையும் நல்லூர் எம். பி. யுமான எம். சிவசிதம்பரத்தையும் கேட்டுள்ளார். (அ)

## இன்றைய இராசிப்பலன்

கார்த். மாதம் 18-ந் திகதி
திங்கட்கிழமை
(4-12-78)

மேடம்:- கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும், வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு, தாய்வழி ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

இடபம்:- அறவழியில் நாட்டம் செல்லும், மக்களால் மகிழ்ச்சி, மனம்நிறைந்த வாழ்வு, வரவேற்கவேண்டிய தினம்.

மிதுனம்:- உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம், எதிரிகள் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும், அவதானமாக இருக்க வேண்டும், மட்டமான நாள்.

கடகம்:- குடும்பத்தில் கிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும், ஸ்திரவழியாலும் நன்மைகள் கிடைக்கும், காதல் வாழ்வில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு.

சிங்கம்:- எண்ணியதில் தடைகள் தோன்றும், தொழிலிலும் நஷ்டமேற்படும், உடல்நலத்தைப் பேணி நடக்கவும்.

கன்னி:- பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும, பதவி உயர்வுக்கும் இடமுண்டு, புண்ணிய ஸ்தலமொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்:- கடமையில் ஆர்வம் பிறக்கும், இதன்மூலம் புதியபாதை திறக்கும், சிலர் வாழ்க்கையில் இடமாற்றமும் ஏற்படும், நல்லநாள்.

விருச்சிகம்- நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும், சுற்றுடலில் மதிப்புயரும், பெரிய மனிதர்களின் ஆதரவும் கிடைக்கும்.

தனுசு:- எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்துஉந்தும், ஏமாற்றம் தாக்கும் விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.

மகரம்:- கண்களில் கனல் தெறிக்கும். கருத்தினில் கர்வம் தோன்றும். கொள்கையில் கோணலாலே குன்றிடும் புகழும்தானே.

கும்பம்:- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டமாகவும் அமையும். மகிழ்ச்சிக்கிடமுண்டு.

மீனம்:-: நினைத்தது நடக்காது. நிம்மதி பறக்கும். நெடும்பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும். அதிக சிந்தனையைத் தவிர்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# தமிழ்இளைஞர் பேரவை 3 முகாம்களில் நிவாரணம்

## நாளை 4-வது குழு மட்டுநகர் செல்கிறது

[யாழ்ப்பாணம்]

கிழக்கிலங்கையில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள தமிழ்இளைஞர் பேரவையின் நாலாவது தொண்டர் படை இன்றுகாலை மட்டுநகர் செல்கிறது. ஏற்கனவே மட்டுநகர் சென்ற மூன்று குழுக்களும் மட்டக்களப்பு, அரசடி, கல்முனை, பாண்டிருப்பு, பட்டிப்பு, மண்டூர் ஆகிய இடங்களில் நிரந்தர முகாம்களை அமைத்து செயலாற்றுகின்றன.

இன்று செல்லும் தொண்டர்களுடன் வைத்திய நிபுணர் குழுவும் செல்கிறது. முதல் கட்டமாக சகல பாதைகளையும் துப்புரவு செய்தல், வீடிழந்தவர்களுக்கு தற்காலிக மனை அமைத்தல், கிணறுகளை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை இவர்கள் மேற்கொள்வர்.

மில்க்வைற் தொழிலதிபர் மட்டுநகர் மக்களுக்கான பெருந்தொகையான சவர்க்காரங்கள, பனைஓலைத் தொப்பிகள. பாய்கள, உணவுப் பண்டங்களை இளைஞர் பேரவையிடம் கையளிததுள்ளார். பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்ட உணவு, உடை, பாவனைப்பொருங்களும இன்று விசேட வண்டிமூலம் இளைஞர் பேரவையால் மட்டுநகருக்கு அனுப்பிவைக்கப்படும்.

பெருந்தொகையான இளைஞர் பேரவைத் தொண்டர்கள் மட்டுநகர் நிவாரணப் பணிகளுக்கு தேவைப்படுவதால ஆர்வமுள்ள தொண்டர்கள தமிழ்இளைஞர் பேரவை அலுவலகத்திற்கு வருகைதருமாறு இளைஞர் பேரவை நிர்வாக செயலாளர் திரு. த. சந்ததியார் அழைப்பு விடுத்துள்ளார். (கு-இ)

## வட்டுக்கோட்டைத் தொகுதியில்

[பண்டத்தரிப்பு]

கிழக்குமாகாண சூறவளி, வெள்ள நிவாரண உதவிக்காக வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு, தா. திருநாவுக்கரசுவினால் நியமிக்கப்பட்ட தொண்டர் குழுவினர் கடந்த மூன்றுதினங்களாக வட்டு மேற்கு, வட்டுகிழக்கு, தொல்புரம், சுழிபுரம் மேற்கு ஆகிய பகுதிகளில் நிதி, உடை என்பனவற்றைச் சேகரித்து அவற்றிற்கு உடனடியாக பற்றுச்சீட்டுகளையும் வழங்கினார்கள். பாடசாலைச் சாரணர்களும் வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் மற்றும் கூட்டணித்தொண்டர்களும் வட்டு எம். பி யின் செயலாளர் திரு. நாக. பத்மநாதன் மேற்பார்வையில் நிவாரணப் பணிபொருட்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சில வீடுகளில் விலை உயர்ந்த சேலைகளைக் கூட நிவாரணஉதவியாகக்கொடுத்து உதவியுள்ளார்கள். (அ)

## வி. என். தலைமையில் சாவகச்சேரித் தொகுதி சூறுவளி நிவாரணசபை

[மட்டுவில்]

கிழக்கிலங்கையில் சூறுவளி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் சாவகச்சேரித் தொகுதியில் சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் தலைமையில் "சூறுவளி நிவாரண சபை" ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இச்சபையில் பாடசாலைஅதிபர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் உட்பட சகலதரப்பினரும் இடம்பெற்றுள்ளனர்.

தொகுதியிலுள்ள சகல குடியிருப்பாளர்களிடமும் வீடுவீடாகச் சென்று இச்சபை நிதி, உணவு, உடை, கிடுகு, சீமெந்து முதலானவற்றைச் சேகரிக்கும்.

கிழக்கிலங்கையில் பாதிக்கப்பட்டு நிவாரணம்பெறமுடியாதிருக்கும் பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று இச்சபைதான் சேகரித்தவற்றை வழங்கும்.

சபைத் தொண்டர்கள வீடு புனர்நிர்மாணப் பணியிலும் உதவுவர்.

இச்சபையின் நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. வி. என். நவரத்தினம் எம பி, உபதலைவர்கள்: திரு. எஸ், முருகவேள் (உதவி அரசாங்க அதிபர்), திரு. பி. வெற்றிவேலு (இந்துக்கல்லூரி அதிபர்), செயலாளர்: திரு. கே. சின்னத்துரை (நாவற்குழி மகா வித்தியாலய அதிபர்), உபசெயலாளர்: திரு. கே. தீவகதாஸ், பொருளாளர்: திரு. சி. நவரத்தினம், உபபொருளாளர்: ஜனாப் என். எம். சுல்தான்.

21 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெர்வுசெய்யப்பட்டறு. (உ)

## அரிசியில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

அரிசியில் எங்கள் நாட்டின் சுயதேவையைப் பூர்த்தியாக்க வேண்டுமானுல் இன்னும் இரண்டு கோடி புசல் அரிசியை நாம் விளைவிக்கவேண்டியிருக்கிறது. இன்னும் இரண்டு கோடி புசல் அரிசியை நாம் விளைவித்தால்தான் இன்றைய சனத்தொகைக்கேற்ப நாம் அரிசியில் தன்னிறைவு காண முடியும்.

இந்நாட்டின் சனத்தொகையில் 15 சதவீத மக்கள்- வடக்காக இருந்தாலென்ன, கிழக்காக இருந்தாலென்ன, தெற்காக இருந்தாலென்ன, சப்ரகமுவவாக இருந்தாலென்ன- நெல் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறூர்கள். நெல்லை உற்பத்தி செய்யும் விவசாயிகளான இந்த ஏழைப் பாட்டாளிகளின் வருமானம் என்னவென்று சிந்தித்துப்பார்ப்போம். நான் சொல்வதை இங்குள்ள நண்பர்கள் ஏற்றுக் கொள்வார்களென நினைக்கிறேன். இன்றைய உற்பத்தித் தாக்கத்தால் ஒரு ஏக்கர் நெல் விவசாயம் செய்வதற்கு 1,500 ரூபா தேவைப்படுகிறது. ஒரு ஏக்கரிலிருந்து ஒரு விவசாயி பெறும் பலன் ரூபா 500 மாத்திரம்தான். எனவே அவ்வித வருமானத்தைப் பெறும் மக்கள் எங்கள் சனத்தொகையில் 15 சத விதமாக இருக்கும் காரணத்தால், எங்கள் நாடு தன்னிறைவு பெறவேண்டுமென்று மாறி மாறி ஆட்சிக்கு வருபவர்கள் கூறிவருவதனுல், இந்நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்க எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமென்று நாம் விரும்புவதனுல் நாம் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் முதலில் கொடுக்கவேண்டியது நெல் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்காகும்.

இன்று ஒரு கணவன் சம்பளமாக ஆயிரம் ரூபாவையும் அவனது மனைவி சம்பளமாக ஆயிரம் ரூபாவையும் பெற்றுல் இந்த இருவருடையவும் கூட்டு வருமானம் 24,000 ரூபாவாகிறது. ஆனல் இந்த இருவருடைய வருமானமும் இரண்டு யூனிற்றுக்களாகக் கணக்கிடப்பட்டு இவர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

[நாளை வரும்]

# உப-வேந்தராக 'வித்தி': எ.வி.சங்கயாழ். கிளைமகிழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். வளாகத்தின் உப வேந்தராக யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டதையிட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், யாழ்.கிளைச் செயலாளர் செ. மெற்றுஸ்மயில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:

"பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பெரியோர்களுடன் பெரியவர்களாகவும், குழந்தையுடன் குழந்தையாகவும் பழகுபவர். போதிய கல்வித்தகைமையும், சேவைமூப்பும்கொண்டவர். வடக்கு, கிழக்கு, உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற பேதம் பாராது சேவை செய்பவர். தமிழனுக்கு வேதனை ஏற்படும்போது தனது வேதனையாகக் கொள்பவர். மொழிப்பற்று, இனப்பற்று மிகுந்தவர். தன்னலங் கருதாத பொதுச் சேவையாளர். தன் சிந்தனைக்கு சரியென சிந்திப்பதை செயல்படுத்தும் செயல்வீரர். ஒரு சமுதாயத்தின் தலைவனுக்கு இருக்கவேண்டிய சகல அம்சங்களையும் பெற்றுள்ள இவர் சமுதாயத்தின் அறிவுக்களஞ்சியமான பல்கலைக்கழகத்திற்கு உபவேந்தராக நியமிக்கப்பட்டது தமிழ்ச்சமுதாயத்தின் எதிர்காலத்தில் ஒளிமயமான காலம் ஏற்படப்போகின்றது என்பதை உணர்த்துவதாக உள்ளது.

உபவேந்தராக இப்பெரியார் நியமிக்கப்பட்டதனால் தமிழ்ச் சமுதாயம் அவரிடமிருந்து அவர் சேவையிலிருந்து பெறக்கூடிய பலன்கள் அளப்பரியனவாக இருக்கும், அத்துடன் அவருடைய சேவையை பூரணமாகப் பெற இப்பதவி உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை." (உ)

# கூட்டணியிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆவரங்கால் மாநாட்டுக்கு வரவேற்புக்குழு சேர்த்த பணத்தில் எஞ்சியதொகையான ரூ. 7720-40 ஐ குழுத்தலைவர் கூட்டணிக் காரியாலயத்தில் ஒப்படைத்துவிட்டதாக வரவேற்புக் குழுச் செயலாளர் தெரிவித்தார். (அ)

......

# 'யாழ் தேவி'யின் தாமதம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலையில் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்குப் புறப்பட்ட 'யாழ்தேவி' கடுகதி ரயில் குருநாகல் ரயில் நிலையத்தில் தண்டவாளத்தைவிட்டு விலகியதால் பிற்பகல் நாலுமணிக்கே யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது.

உரிய நேரத்தில் குருநாகல் ரயில் நிலையத்தை வந்தடைந்த யாழ்தேவி, மட்டக்களப்பிலிருந்துவரும் ரயிலுக்கு வழிவிட்டுக் கொடுப்பதற்காக பின்னே சென்றுகொண்டிருந்தது. என்ஜின் சென்றபின்னர் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த முதலாவது பெட்டியும் இரண்டாவது பெட்டியும் தண்டவாளத்தை விட்டு இறங்கிவிட்டன. இதன்பின்னர் அந்த இரண்டு பெட்டிகளையும் அங்கேயே கழற்றிவிட்டு சுமார் ஒன்றரைமணி நேரத்தின்பின் யாழ்தேவி அங்கிருந்து புறப்பட்டது.

......

# சிகரட் வான் கொள்ளை வழக்கு

(யாழ்ப்பாணம்)

சிகரட் வான் கொள்ளை வழக்கு இன்றுகாலை மல்லாகம் நீதவான் திரு. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். சந்தேகநபர்களை பிணையில் விடுதலை செய்வது பற்றி இன்று முடிவு செய்யப்படும். (க)

# "பல்கலைக்கழக பிரவேசம்: மீண்டும் தரப்படுத்தல்"

## தமிழ்க் காங்கிரஸ் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழகப் பிரவேசத்தில் மீண்டும் அரசாங்கம் தரப்படுத்தலை கொண்டு வருவதையிட்டு தமிழ் காங்கிரஸ் வன்மையாக கண்டிப்பதுடன் இந்த முடிவை புனராலோசனை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறது.'

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி.பொன்னம்பலம், வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பல்கலைக்கழக பிரவேசத்தில் திறமைக்கு 30 விதமும், பின் தங்கிய பகுதிக்கு 15 விதமும் ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது இதனால் தமிழ் மாணவர்கள் பெரிதும்பாதிக்கப்படுவார்கள்,

அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் 3, 12 [2]க்கு மாறாக இந்த பல்கலைக்கழக பிரவேச முறை அமைந்துள்ளது. யாருக்காவது பாரபட்சம் காட்டக்கூடாதென்றும், பிறப்பிடம், மற்றும், வேறுகாரணங்களால் பாகுபாடு காட்டக்கூடாதென்றும் இந்தப்பிரிவு கூறுகின்றது. அரசவழிகாட்டு கோட்பாடு அத்தியாயம் 6, பிரிவு 27 [2ஏச்]சின் படியும் இது மாறாக அமைந்துள்ளது.

தகுதியானவர்கள் இருந்தாலும், பல்கலைக்கழகம் போக முடியாத நிலையிருக்கிறது. அதனால் அரசு இத்திட்டத்தை புனராலோசனை செய்ய வேண்டும்.'

# "ஒப்பற்ற புலமையினால் தனித்துவம் பெற்றவர்"

(கொழும்பு)

"புலவர்மணி தம் ஒப்பற்ற புலமையாலும் ஆழ்ந்த தமிழ் அறிவினாலும், சலியாத இலக்கிய வரலாறில் தனித்துவம் பெற்றவர். இப்பெரியாரின் மறைவு தமிழ் இலக்கிய உலகினுக்கு ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பாகும்"

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது செயற்குழுக்கூட்டத்தில் புலவர்மணியின் மறைவு குறித்து நிறைவேற்றிய அனுதாபச் செய்தி நிர்மானத்தில் கூறியுள்ளது.

இதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஈழத்துத் தமிழ் மக்கள் போற்றிப்பேணும் இருகண்களுடன் ஒன்றாகத் திகழ்ந்த புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையின் மறைவு தமிழ் ஞானத்தாலும், சளைப்பற்ற இலக்கியப் பணியாலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருமைக்குரிய இடத்தை நிரந்தரமாகப் பெற்றுவிட்டார்.

முதுபெரும் தமிழறிஞரான புலவர்மணி தற்காலத் தமிழிலக்கிய வளர்ச்சிப் போக்குகளையும் வடிவங்களையும் நன்கு அவதானித்ததுடன் அவற்றை மதிப்புடன் வரவேற்றார், படைப்பாளிகளுடன் நெருங்கிய உறவைப் பேணி ஊக்குவித்தார்.

மொழி, இலக்கியம் என்று வட்டத்திற்குள் மட்டும் நில்லாது புலவர்மணி தேசிய விடுதலை இயக்கத்தில் முனைப்பாக பங்காற்றினார். சமூக முன்னேற்றத்திற்காகத் தீவிரமாகப் பாடுபட்டார். பொது மக்களின் இயக்கங்களில் பங்குகொண்டவர்.

புலவர்மணியின் இழப்பால் துயருறும் தமிழ் உலகம் அவரது நினைவுக்குச் செய்யக்கூடிய சரியான மரியாதை அவரது எழுத்துக்களை எல்லாம் அவரது நினைவுக் வெளியிடுவதும் பரவலாக வாங்குவதும் உயர்கல்விப் பீடங்களில் ஆய்வுநூல்களாக ஏற்றும், அவற்றை தமிழ்ப் பேசும் நாடுகளிலெல்லாம் பரப்புவதுமாகும்". [ஊ]

மாமணிகளாக மேற்குறித்த இருமணிகளும் விளங்கினர். இவர்களுள் கிழக்கு தந்த புலவர்மணி எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டார்.

இவ்வாறு புலவர்மணியின் மறைவுக்கு ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளது. மேலும் அதில் கூறியிருப்பதாவது:

கம்பராமாயணப் பாடல்களில் ஊறித்திளைத்து களித்து மிக்க நிலையில் அவர்படைத்த கவிதைகள் ஏராளம் ஏராளம். வெண்பாவிற்கு ஒரு புகழேந்தி என்ற அன்று கூறப்பட்டதற்கு ஏற்ப வெண்பாவிற்கு ஒரு பெரியதம்பிப்பிள்ளை என்று தமிழ் கூறும் நல்லுலகு அவரைஉச்சிமீது வைத்துப் புகழ்ந்துபோற்றும் அளவிற்கு புலமையின் ஊற்றாக விளங்கியவர் நம் புலவர்மணி" என்று மேலும் கூறப்பட்டுள்ளது.

## எழுத்தாளர் பேரவை

பண்டிதமணியெனின், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களையும் புலவர் மணியெனின் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களையும் நினைவுகொள்ளும் அளவிற்கு தமிழ் ஈழத்தின் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும்

# மாணவர் கத்திக்குத்து: இருவருக்கு ரூ. 500 பிணை

(பண்டத்தரிப்பு)

பாடசாலையிலிருந்து வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த மாணவர் ஒருவரை கத்தியால் குத்திப் படுகாயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதாக மாணவர்கள் இருவரையும் சங்கானைப் பொலிசார் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர்கள் இருவரையும் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

பாடசாலையிலிருந்து 100 யார் தூரத்தில் வைத்து சந்திரவதனன் என்னும் பிரஸ்தாப மாணவரை நாகேசன் என்னும் மாணவர் கட்டிப் பிடித்திருக்க பாலச்சந்திரன் என்னும் மற்றைய மாணவர் கத்தியால் குத்தியதாக சங்கானைப் பொலிசில் முறைபாடு செய்யப்பட்டிருந்தது. சந்தேகநபர்களான மாணவர் இருவரும் சட்டத்தரணி சோ. தேவராஜா மூலம் சங்கானைப் பொலிஸ் நிலயத்தில் சரணடைந்திருந்தனர். நீதிபதி மறுவிசாரணையை அடுத்த மாதம் 14-ந் திகதி வரை ஒத்திவைத்தார். [உ]

# டிராக்டர் விபத்து: சாரதி நசுங்குண்டு மரணம்

(பண்டத்தரிப்பு)

குழை ஏற்றிக்கொண்டிருந்த டிராக்டர் பெட்டியில் ஏற்பட்ட பழுதைத் திருத்துவதில ஈடுபட்டிருந்த டிராக்டர்சாரதி மீது எதிர்பாராதவிதமாக பெட்டி சரிந்ததினால் அதற்குள் அகப்பட்டு நசிந்து பரிதாபகரமாக உயிர்துறந்த சம்பவம் ஒன்று சில்லாலையில் நடைபெற்றுள்ளது.

சுழிபுரத்தைச் சேர்ந்த வி. பாலசிங்கம் என்னும் 32 வயதுள்ள பிரஸ்தாப சாரதியை உடனடியாக யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அங்கு அனுமதிக்கப்பட்ட சிறிதுநேரத்தில் மரணமானார்.

இவரது மரணவிசாரணையை யாழ்ப்பாணம்மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் நடாத்தினார். வி. கணேசமூர்த்தி, எம். அருணாசலம், ம. ஜெயராசா ஆகியோர் சாட்சியமளித்தனர். பிரேத பரிசோதனையை டாக்டர் எஸ். சரவணபவானந்தன் நடத்தினார். மரணவிசாரணை அதிகாரி உடல் நசுங்குண்டதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். சங்கானைப் பொலிஸ் நிலைய சார்ஜண்ட் திரு. குவரத்தினம் சாட்சிகளை ஆஜர்செய்தார். (உ)

## உணவு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அனைவரும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் கூட்டணி எம். பி. க்கள் கருத்துவெளியீட்டையில், உணவு விநியோகம் திருட்தியாகஇல்லையென்றும், சீரானமுறையில் நடைபெறவில்லையென்றும் கண்டனம் தெரிவித்ததுடன் அரசாங்க அதிபர் பொறுப்பில் இதனை விடாமல், பொது ஸ்தாபனங்களின் பொறுப்பில் உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தைவிடவேண்டும் என்றும்கேட்டுக்கொண்டனர்.

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரமும் இங்கு வந்திருந்தார்.

வடபகுதி கூட்டணி எம். பி.க்கள் நேற்றிரவு யாழ்ப்பாணம் திரும்பினர். (ம)

# இன்று சுன்னாகத்தில்

(யாழ்ப்பாணம்)

புயல்நிவாரண நிதிசேகரித்து வரும் அகில இலங்கைத் தமிழ் நாடகக்கலைஞர் பேரவையினர் இன்று திங்கட்கிழமை சுன்னாகத்தில் உண்டியல் குலுக்கிநிதி சேகரிக்கவிருக்கின்றனர்.

# நிதிசேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். வெளிவாரி பட்டப் படிப்புகள் நிறுவன விரிவுரையாளர்களும் மாணவர்களும் இயக்குனர் திரு. மா. குலேந்திரன் தலைமையில் சூறாவளி நிவாரண நிதி ஒன்றை நேற்று யாழ். நகரில் சேகரித்தனர். நேற்று மட்டும் 2000 ரூபா வரை அவர்கள் சேகரித்துள்ளனர். ஐம்பது சதம் மட்டுமே அவர்கள் அறவிட்டனர் தொடர்ந்து இந்த வாரமும் சகல பகுதிகளிலும் நிதி சேகரிப்பார்கள்.

# சென். மேரிஸ் வெற்றி

[யாழ்பாணம்]

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், திருமலை சென். அன்ரனிஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்றசிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், சென். மேரிஸ் கழகம் 1—0 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார்.

## மகளிர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி ஆர். சண்முகலிங்கம், செல்வி சுபாஜினி இராஜலிங்கம், திருமதி நல்லதம்பி, திருமதி தா. வேதநாயகம், செல்வி பத்மினி சுப்பிரமணியம், செல்வி வேதநாயகம். (கே-அ)

கிரிக்கெட் டெஸ்ட்

# இந்தியா—424 மே. இந்தியா4:184

பம்பாய், டிச. 3

இந்திய மேற்கிந்திய முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் 3-வது நாளான இன்று. ஆட்டநேர இறுதிவரையான ஸ்கோர் விபரம்:

இந்தியா முதல் இன்னிங்ஸ்-424 ஓட்டங்கள்.

மேற்கிந்தியா- 4 விக்கட்டுகள் இழப்புக்கு 184 ஓட்டங்கள்.

மேற்கிந்திய காப்டன் களிச்சரன் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை ஓய்வு நாள்.

• • •

## கிழக்கிலங்கை...

[1ம் பக்சத் தொடர்ச்சி]

ழர் விடுதலைக்கூட்டணிப் பணிமனையில்கூடி பின்வருவோரை நிர்வாகிகளாகத் தெரிவுசெய்தது. தலைவர்; திரு. எம், சிவசிதம்பரம் (நல்லூர்த் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர்), உபதலைவர்: டாக்டர் பி. அம்பிகாவதி, செயலாளர்கள்: திருவாளர்கள் தே. ப. அகஸ்தியர், க நடராசா, பொருளாளர்கள் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை (கோப்பாய்த் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர்), திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்கள் திரு. வெ. யோகேஸ்வரன் (யாழ்ப்பாணத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர்) டாக்டர் வி சத்தியநாதன், திருமதி யோ. கேஸ்வரன், என். தியாகராசா, சிவமகாராசா, க. சின்னத்துரை, ஏ. கே. இராமலிங்கம் ஆகியோர் தெரிவாகினர்.

இக்குழு முதல் கட்டமாக, சகல தொகுதிகளிலுமுள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் க. பொ. த. (உயர்தரம்) வகுப்பு மாணவர்களில் கல்லூரிக்கு தலா 50பேராகசேர்த்து மட்டுநகருக்கு ஆயிரக்கணக்கான தொண்டர்களைஅனுப்பி வைக்கும். இவர்கள் அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் குழுக்களாக இயங்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்வர். [கெ]

• • •

# இடமாற்றம்

[நாயன்மார்கட்டு]

நல்லூர்கிராமசேவையாளர் திரு. மயில்வாகனம் அரியாலை மேற்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு அரியாலை மேற்கு கிராமசேவகர் திரு. எஸ். வசந்தகுமார் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். (அ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu Telephone: 389, Registered as a Newspaper in Sri Lanka.